1992 ஏப்ரல் 7]

அந்த மருத்துவமனையில் அந்த சிகிச்சைப் பிரிவு இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதில் பத்து படுக்கைகள் இருக்கின்றன. அந்த பத்து படுக்கைகளும் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. கட்டிடத்தில் சில குறைபாடுகளோ அல்லது வேறு இடத்திற்கு அல்லது வேறு பணிக்கு மாற்றப்பட்டு இருக்கிறதா என்பதைப் பற்றி நான் கேட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கிறேன். அதற்காக ஒதுக்கப்பட்ட கருவிகள் முறையாக பயன்படுத்தப்படுகிறதா இல்லையா என்பதைப் பற்றியும் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அந்தப் பிரிவு இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 481, திரு. தேனி பன்னீர் செல்வம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. கே. தவசி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

வனத்துறைக்குச் சொந்தமான காடுகளில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கல்.

481—

*4024—திரு. தேனி. பன்னீர்செல்வம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கம்பம், கூடலூர், லோயர்கேம்ப் மலை அடிவாரம், கடமலைக்குண்டு மற்றும் மயிலாடும்பாறை ஒன்றிய மலைப் பகுதிகளிலுள்ள அரசு காடுகளிலும் வனத்துறைக்குச் சொந்தமான காடுகளிலும் பல ஆண்டுகாலமாக குடியிருந்தும், விவசாயம் செய்தும் வருவோர்க்கு அந்தந்த நிலங்களை பட்டா செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

1980-ம் ஆண்டு வனப்பாதுகாப்பு சட்டப்படி, மைய அரசின் இசைவின்றி வனநிலங்களை வனமற்ற உபயோகத்திற்கு வழங்க இயலாது. மற்றும் இந்த வனப்பகுதி பெரியார் வைகை நீர்ப் பிடிப்பு பகுதியில் உள்ளதால் பட்டா வழங்க இயலாது.

(முற்பகல் 10-00)

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகளில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பாக குடியேறியவர்கள் இன்னும் பட்டா வாங்காத நிலையிலே இருக்கிறார்கள். அதேபோல, கல்லுப்பட்டியிலிருந்து முத்தாலம்பாறை வரை மாண்புமிகு பேரவைத் தலைவருடைய ஊருக்கும் எங்களுக்கும் உள்ள தொடர்புள்ள ரோட்டை கடந்த 1980-ஆம் ஆண்டு

நில ஆர்ஜிதம் செய்தும் இன்னும் ரோடுகள் போடப்படாத நிலையில் பாரஸ்டினுடைய இடையூறு இருக்கிறது. எனவே, இதை நிவர்த்தி செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் பகுதியிலேயிருந்த, வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை, 5 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களை அங்கே இருக்கின்ற பல்வேறு எஸ்டேட் முதலாளிகள் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். வனத் துறை உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அந்த ஆக்கிரமிப்பு அனைத்தும் இப்போது அகற்றப்பட்டு இருக்கிறது. இப்போது அங்கே சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டி, 8-3-1992 அன்று, அந்த ஆக்கிரமிப்புகளை, நாம் அகற்றியதை மீண்டும், அங்கே சென்று ஆக்கிரமிப்பு செய்வோம் என்று சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே கூட்டம் கூட்டி பேசியதாகச் சொல்கிறார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு நம்முடைய வன த்துறை அலுவலர் அவர்கள் கொண்டு சென்றிருக்கிறார்கள். சர்வ கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே நிறைந்து இருக்கின்ற காரணத்தால், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, எல்லா மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய தமிழகத்தில்தான் குறைந்த வனப்பகுதி இருக்கின்ற காரணத்தால், இதுபோன்ற வனப்பகுதிகளிலே ஆக்கிரமிப்பு செய்கின்றவர்களை அகற்றுகின்ற போது, அருள் கூர்ந்து, உங்களுடைய ஒத்துழைப்பை அவர்களுக்கு நல்காமல், இந்த அரசுக்கு உங்களுடைய ஆதரவை நல்கிட வேண்டுமென்று ஒரு வேண்டுகோளாக இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 482, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

482—

கன்னியாகுமரியில் விமான இறங்குதளம்

*4672—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் விமான இறங்கு தளம் அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,